தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, பவ-திருவள்ளுவர் ஆண்டு-2025

1994, ஏப்ரல் 18, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. ச. காந்திராஜன் அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து'

ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல் ஒருவர்க்கு ஏழு பிறப்பிலும் உதவும் தன்மை உடையதாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 281, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 282, டாக்டர் ஜெ. பரந்தாமன் இருக்கையில் இல்லை, அவருக்குப் பதிலாக டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

282--

அரசு மருத்துவர்களுக்குச் சிறப்புத் துறைகளில் பயிற்சிஅளித்தல்.

***17547-டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் அனைத்து மருத்துவர்களுக்கும், அவர்கள் விரும்பும் சிறப்புத் துறைகளில் பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1994 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் வேலை செய்பவர்களுக்கு குறிப்பாக வருவாய்த்துறை போன்றவற்றில் வேலை செய்பவர்களுக்கு நீதித் துறையில் பயிற்சி கொடுத்து வருகின்றார்கள். அவர்களுக்குப் பல்வேறு துறைகளிலும் அந்தப் பயிற்சி வழங்குவதனால் துறை சிறப்பாக நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும். அதுபோல் அறுவைசிகிச்சை போன்று மருத்துவத் துறையில் பொது மருத்துவம் போன்ற கட்டாயப் பயிற்சி கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமேயானால், அந்த மருத்துவர் எல்லாத் துறைகளிலும் சிறந்த மருத்துவராக விளங்குவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. ஆகவே அரசு இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் துறையில் சிறப்பாக செயலாற்றி, பல்வேறு பிரச்சினைகளையும் களைந்து இந்தத் துறை நல்லமுறையில் நடப்பதற்கு வழி வகுத்து வருகின்றார்கள். ஆகவே மருத்துவருடைய நலன் கருதி, மருத்துவர்கள் எல்லாத் துறைகளிலும் சிறப்பாக செயலாற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, இதில் கட்டாயம் பயிற்சி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவர்கள் அந்தந்த ஸ்பெஷாலிட்டியிலே அவர்கள் மேற்படிப்பு படிக்கிறார்கள். அதிலே இப்போது எந்தத் தடையும் இல்லை. எனவே ஒரு குறிப்பிட்ட மருத்துவர் எம்.எஸ்ஸோ, எம்.டி.யோ, இப்படி உயர்கல்வி படிப்பதற்கு இப்போது நாம் எந்தத் தடையும் விதிக்கவில்லை. 'என்ட்ரன்ஸ் எக்சாம்' எழுதி மெரிட்படி அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஆனால் வருவாய்த் துறையிலே கொடுக்கிற பயிற்சி பற்றிச் சொன்னார்கள். நாம் அதைப்போன்ற ஒரு அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரெயினிங் கொடுக்கிறோம். ஆரம்பக் கட்டத்திலே மருத்துவரைத் தேர்ந்தெடுக்கின்றபோது அந்த மருத்துவர் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் செல்வதற்கு முன்னாலே அவர்களுக்கு அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரெயினிங் கொடுக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஏற்கெனவே ரெக்ரூட் செய்யப்பட்டவர்களுக்கு குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள்ளாக அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரெயினிங் கொடுத்துவிடவேண்டுமென்ற நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது.

1994 ஏப்ரல் 18]

டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரெயினிங் கொடுப்பதாகக் கூறினார்கள். ஆனால் அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரெயினிங்கிற்கும் படித்த படிப்பிற்கும் சம்பந்தம் இல்லாவிட்டாலும் அட்மினிஸ்ட்ரேஷனை யார் வேண்டுமென்றாலும் செய்யலாம், எப்போது வேண்டுமென்றாலும் ட்ரெயினிங் கொடுக்கலாம். ஆனால் கிராமங்களிலே பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு பல்வேறு துறைகளிலே பயிற்சி அளிக்கின்ற வகையில், ஒரு ஸ்பெஷல் ட்ரெயினிங் கொடுப்பதன் காரணமாக அந்த மருத்துவர் அந்தக் கேசை அந்த இடத்திலே ஈசியாக ஹேண்டில் பண்ணுகின்ற அளவிற்கு ஒரு மனப் பக்குவமோ, அதேபோன்று ஒரு ஸ்பெஷல் ட்ரெயினிங் கொடுப்பதன் வாயிலாக ஒவ்வொரு துறையிலும் தான் கற்ற கல்வியை மீண்டும் புதுப்பிக்கின்ற பயிற்சியாக இருப்பதனால், இதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற வகையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்து, இதற்கு 'ஆம்' என்ற ஒரு சிறப்புத் திட்டம் ஒன்றைத் தீட்டி, அந்தப் பயிற்சி கொடுக்கின்ற திட்டத்தை மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அட்மினிஸ்ட்ரேடிவ் ட்ரெயினிங் பற்றிச் சொன்னதற்குக் காரணம், இதில் என்ன பயிற்சி வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று தெரியாத காரணத்தால் அதையே நான் குறிப்பிட்டேன். இந்தத் துறையிலே இருக்கிற மிகப் பெரிய சிக்கலே அட்மினிஸ்ட்ரேஷனிலே மருத்துவர்களுக்குப் போதிய பயிற்சி இல்லாததுதான் இப்போது இதிலே சிக்கலாக இருக்கிறது. சிறந்த மருத்துவர்களாக இருக்கிறார்கள். பெயர் பெற்றவர்களாக இருக்கிறார்கள். வெளிநாடுகளிலே இருந்துகூட நம்முடைய மருத்துவர்களை சிறப்பான மருத்துவர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் அப்படி இருக்கக் கூடியவர்கள் நீண்டகாலமாக மருத்துவப் பணியை மட்டுமே பார்த்துவிட்டு, திடீரென்று அவர்கள் அட்மினிஸ்ட்ரேடிவ் போஸ்டுக்கு வருகின்றபோது அவர்களுக்கு அதை முழுமையாகச் செயல்படுத்துவதற்குப் போதிய பயிற்சி இல்லாத காரணத்தால் பல்வேறு சிக்கல்களை நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். எனவேதான் ஒரு திட்டத்தைப் போட்டவுடனே, அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதிலேகூட சில தடைகளும் சிக்கல்களும் இருக்கின்றன. எனவேதான் ஆரம்ப கட்டத்திலேயே அவர்களுக்கு அட்மினிஸ்டிரேட்டிவ் ட்ரெயினிங் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்திருக்கிறோம். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு

மருத்துவர் போகிறார் என்று சொன்னால், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, அந்த மருத்துவருக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தை முழுமையாக நிர்வகிக்கிற பொறுப்பு, அவருடைய தலையிலேயே சுமத்தப்படுகிறது. எனவே அவருக்கு பயிற்சி இல்லை என்று சொன்னால் ஆரம்பத்திலேயே பல்வேறு சிக்கல்களிலே அவர்கள் மாட்டிக்கொள்கிற நிலையிலே ஆளாக்கப்படுகிறார்கள். எனவே இதையெல்லாம் போக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான் அவர்களுக்கு அட்மினிஸ்ட்ரேட்டிவ் ட்ரெயினிங் என்று நாம் கொடுக்கிறோம்.

முற்பகல் 10.05

இது ஒரு விவரமான நிர்வாகத்திற்குத் தேவையான ட்ரெயினிங். இன்னொன்று அவர் சொல்வது, எல்லா மருத்துவ ஸ்பெஷாலிட்டியும் சேர்த்து பயிற்சி எடுத்துக் கொள்வதற்கான வாய்ப்பு கொடுக்கப்படுமா என்று கேட்கிறார்கள். அது நடைமுறையிலே அவ்வளவு சாத்தியப்படாது என்று கருதுகிறேன். காரணம் நிறைய ஸ்பெஷாலிட்டிகள் இருக்கின்றன. டிப்ளோமா இருக்கிறது, டிகிரி இருக்கிறது. இப்படி நிறைய ஸ்பெஷாலிட்டிகள் இருக்கின்றன. இந்த கோர்ஸ்களில் அவர்கள் தனித்தனியாகப் படித்துவிட்டு வருகிறபோதுதான் அதிலே முழுமையாக பயிற்சி பெற முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே இதுபோன்று எல்லாத் துறைகளையும் சேர்த்து ஒன்றாகப் பயிற்சி கொடுப்பதற்கான வாய்ப்பு இல்லை. எனவே இதைத்தான் நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். இன்னொன்று. குறிப்பாக கிராமப் புறத்திலே, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இருக்கிற மருத்துவர்கள் ஏற்கெனவே எம்.பி.பி.எஸ். படித்து முடித்து விட்டுத்தான் வருகிறார்கள். எனவே அதுவே போதுமானதாக இருக்கிறது. தனிப்பட்ட முறையிலே என்னென்ன விதமான பயிற்சி என்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலே விளக்கமாகக் கேட்டு, வேண்டுமானால் அது தேவையாக இருந்தால் அது பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் மு. காளிராஜன்.

டாக்டர் மு. காளிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிகின்ற அரசு மருத்துவர்களுக்கு தற்போது அனஸ்தீசியா ட்ரெயினிங், நிர்வாக ட்ரெயினிங் மற்றும் கண் சிகிச்சைக்கான ட்ரெயினிங் போன்றவைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிகின்ற அரசு மருத்துவர்களுக்கு தீவிர இருதய

1994 ஏப்ரல் 18]

சிகிச்சை பயிற்சி கொடுக்க வேண்டும். அதேபோல தீவிர விபத்து சிகிச்சைக்கான பயிற்சியும் கொடுக்கவேண்டும். ஏனென்றால் கிராமப் புறங்களில் இருக்கிற ஆரம்பர சுகாதார நிலையங்களுக்குச் செல்லுகிற இருதய நோயாளிகளையும் விபத்துக்குள்ளான நோயாளிகளையும், அவர்கள் அருகிலே இருக்கிற பெரிய மருத்துவமனைக்குத்தான் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு உரிய சிகிச்சை கிடைக்காமல் இடைவெளியிலேயே அவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்ற சூழ்நிலை இருப்பதால் இந்த இரண்டு பயிற்சியையும் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனஸ்தெடிஸ்ட்-ஐப் பொறுத்தவரை நமக்கு போதிய அளவிலே எண்ணிக்கை இல்லை. நிறைய எம். எஸ். படித்தவர்கள், அறுவை சிகிச்சை செய்யக் கூடிய மருத்துவர்கள் இருக்கிறார்கள். நிறைய அறுவை அரங்குகளும் இருக்கின்றன. மருத்துவ மனைகளும் இருக்கின்றன. ஆனால் அப்படி திட்டமிட்டு தேவையான அனஸ்தெடிஸ்ட்களை இதுவரை தேர்ந்து எடுக்காமலேயே விட்டு விட்டார்கள். எனவே படிப்படியாக, உடனடியாக இதனைத் தீர்ப்பதும் சிரமமான காரியம். வருகிற காலி இடங்களுக்கு ஏற்பதான் தேவையானவர்களை நிரப்ப வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன் காரணத்தால்தான் மூன்று மாதம் அனஸ்தெடிக்ஸ் ட்ரெயினிங் கொடுக்கலாம் என்று சொல்லி அரசு முடிவு எடுத்து அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதேபோன்றுதான் கண் சிகிச்சை. இப்போது இருதய சிகிச்சையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது முக்கியமானது என்றே நானும் கருதுகிறேன். எனவே அப்படி சில முக்கியமான பொறுப்புகளிலே தேர்ந்தெடுத்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மருத்துவர்களுக்கு பயிற்சிகளைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனால் அதனுடைய சாத்தியக்கூறுகளையெல்லாம் ஆய்ந்து எந்த அளவிற்கு முடியும் என்பதைப் பார்த்துத்தான் அதற்கு பின்னாலே நடவடிக்கை எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'Health for all by 2000 A.D. ' என்ற உன்னத நோக்கோடு மிக நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி வரும் மாண்புமிகு இதய

தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியில் பயிற்சி மருத்துவர்களின் காலம் ஓராண்டாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சிறப்பு பயிற்சி கொடுக்கும் இந்த நல்ல திட்டத்தை செயல்படுத்திட பயிற்சி மருத்துவ காலத்திலேயே கடைசி 3 மாதங்களுக்கு ஒதுக்கி அனைத்துத் துறைகளிலும் அனைத்து பொறுப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட 10 நாள் அல்லது 15 நாட்கள் என்று நிர்ணயித்து, இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளையும் ஒருங்கிணைத்து, அவர்கள் ஹவுஸ் சர்ஜன் கோர்ஸ் முடித்து டி.என். பி. எஸ். சி. மூலம் செலக்ட்டாகி கிராமப்புறங்களிலே பணி புரிய அவர்கள் பணியில் அமர்த்தப்படும் முன்பே அவர்கள் சிறப்பு மருத்துவர்களாக எல்லாத் துறைகளிலும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஆதலால் ஹவுஸ் சர்ஜன் பயிற்சியில் கடைசி 3 மாதங்களை இதற்காக ஒதுக்கிச் செய்யும் சிறப்புத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.10

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.ஆர்.ஆர்.ஐ.-ப் பொறுத்தவரை 12 மாத காலம். இந்த 12 மாத காலத்திலே அவர்கள் எந்தெந்த பயிற்சியைப் பெற வேண்டும், எங்கெங்கே ரொட்டேஷன் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வைத்து அந்த ரொட்டேஷன் இப்போது கொடுக்கப்பட்டு வருகிறது. இப்போது ஹவுஸ் சர்ஜன் பீரியடை ஓராண்டுக்கு மேலே நம்மால் நீடிப்பது சரியாக இருக்காது என்று கருதுகிறேன். ஆனால் இந்த ஓராண்டுக்குப் பின்னாலே அவர்கள் முடித்த பின்னாலே முழுமையாக மருத்துவர்கள் என்ற பட்டத்தை அவர்கள் பெற்றுவிடுகிறார்கள். அதற்குப் பின்னாலே ஸ்பெஷல் ட்ரெயினிங் என்று அவர்கள் வந்தால் அது அவர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆனால் அது ஒரு கட்டாயமாக இல்லை. யார் விரும்புகிறார்களோ அவர்கள் ஸ்பெஷல் ட்ரெயினிங் எடுத்துக் கொள்வதற்கு ஓராண்டுக் காலம் ஸ்பெஷல் ட்ரெயினீஸாக வருவதற்கு இப்போது நாம் வழி வகையை வைத்திருக்கிறோம். அப்படி அவர்கள் வருகின்ற போதுகூட குறிப்பிட்ட ஒரு துறையிலே அவர்கள் அந்த ட்ரெயினிங்கை எடுத்துக்கொள்வதற்கு விரும்பினால் அந்தத் துறையிலே நாம் அனுமதிக்கிறோம். ஆனால் அரசு மருத்துவர்களை புதிதாகத்

1994 ஏப்ரல் 18]

தேர்ந்தெடுக்கின்றபோது இனிமேல் அந்த ட்ரெயினிங்கைக் கொடுத்து பதவியிலே அமர்த்தலாமா என்பதைப் பற்றி நாம் ஆய்வு செய்ய வேண்டும். காரணம் நிதிப் பிரச்சினை எல்லாம் அதிலே வருகிறது. எனவே, அதைப்பற்றி ஆய்வு செய்து அதற்குப் பின்னாலே முடிவு எடுக்கலாம். ஆனால் நல்ல யோசனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பெ. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு நிர்வாக ரீதியாக தாங்கள் பயிற்சி கொடுக்கிறீர்கள். கிட்டத்தட்ட 3 மாதத்திற்கு மல்டி பர்பஸ் ட்ரெயினிங் என்று நாம் கொடுக்கின்றோம். மலேரியா பயிற்சி தருகிறோம். அதே போல் கொல்லி மலை, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, ஏற்காடு மலை, கல்ராயன் மலை போன்ற மலைப் பகுதிகளில் பெரும்பாலும் "பால்வினை நோய்" அதிகமாக உள்ள நோயாளிகள் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 75% அதுபோல் இருக்கிறார்கள். அங்கே பணிபுரியும் மருத்துவர்களுக்கு நோயாளிகளின் நோய் அறிய ஆண்டிஜன் மற்ற இதர பொருள்கள் கொடுத்திருக்கிறார்கள், வி.டி.ஆர்.எல். செக்கப் பண்ணுவதற்காக. மலைப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்களுக்காவது தனிப் பயிற்சி கொடுக்கப்படுமா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்.பி.பி.எஸ். படித்த மாணவர்களே அதையெல்லாம் ஓரளவிற்கு சமாளித்து வரமுடியும் என்ற அடிப்படையிலேதான் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அடிப்படை எம்.பி.பி.எஸ். படித்தவர்களே போதும் என்ற ஒரு நிலையை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இருந்தாலும் இப்போது எந்தெந்த இடத்திலே ஸ்பெஷலிஸ்ட் தேவையோ அதற்கு ஏற்ப மருத்துவர்களை எடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்து சொல்லப்பட்டு அதை இப்போது நடைமுறையிலே கொண்டுவருவதற்கான நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் குறிப்பிட்டு இப்படி இருக்கின்ற சில பகுதிகளிலே இதுபோன்ற நிலைகள் இருக்குமேயானால் அதைப்பற்றி ஆய்வு செய்து தனிப் பயிற்சியைக் கொடுப்பதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 283, திரு. தா. செழியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.